[1986 மே 8

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எவ்வளவுக்கெவ்வளவு விரைவுபடுத்தமுடியுமோ அவ்வளவுக்கெவ்வளவு விரைவுப்படுத்தப்படும்.

குடந்தை மகாமகம் திருவிழா.

702 (*வினா எண். 1472) திரு கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமகம் திருவிழாவை "தேசிய திருவிழாவாக' அறிவிப்பது குறித்து திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சிறியூர்—தெங்குமரஹாடா இணைப்பு சாலை.

703 (*வினா எண். 3603) திரு கே. உச்சி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி, சிறியூர் என்ற இடத்திலிருந்து தெங்குமரஹாடாவை இணைக்கும் புதிய சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டு தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூரிலிருந்து, உதகை, மேட்டுபாளையம் வழியாக பவானி சாகர் செல்லும் வழி கிட்டத்தட்ட 125 கிலோ மீட்டருக்கு மேல் ஆகிறது. இந்த சிறியூர் வரை செல்லக்கூடிய வழியில் ஏற்கனவே

1986 மே 8]

15, 20 கிலோ மீட்டர் செப்பனிடப்பட்டு, புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அங்கு பேருந்துகள் விடப் பட்டுள்ளன. இன்னும் மீதியுள்ள 15 கிலோ மீட்டர் தான் பவானி சாகரை இணைக்கிற பாதையாகவுள்ளது. அதையும் இணைத்தால் மக்கள், 125 கிலோ மீட்டர் செல்லக்கூடிய பாதை, 60 கிலோ மீட்டராக குறைக்கப்படும். ஆகவே, மக்கள் நன்மையைக் கருதி, அதனை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சிறியூர்—தெங்குமராஹாடா சாலைப் பகுதி என்பது, மிகுந்த முக்கியமான வனப்பகுதியாக அமைந்திருக் கிறது. அந்தப் பகுதியிலே தான் வனவிலங்குகள், குறிப்பாக யானைகள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட பகுதியில் சாலைகள் அமைத்து, போக்குவரத்தை ஏற்படுத்தத் தொடங்கினால் மக்களுடைய நடமாட்டமும், அதைத் தொடர்ந்து பல்வேறு வாழ்க்கை முறைகளும் அங்கே ஏற்பட்டு விடும். அது வன விலங்குகளுக்கும் பாதுகாப்பாக இராது, அதையொட்டிய அந்தக் காட்டுப் பகுதியும் பாதுகாப்பாக அமையாது என்று வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், வன விலங்குகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கின்ற இன்றைய அந்தத் தத்துவத்தையும், அந்தக் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் பகுதியிலே சாலைகள் அமைப்பது உசிதம் அல்ல என்று முடிவெடுத்திருக்கிறது.

காற்றுச் சக்தியிலிருந்து மின் உற்பத்தி.

704 (*வினா எண். 7742) **திரு. டி. ஆர். வேங்கடராமன்:** மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், முல்லைக்காட்டில், நிறுவப் பட்டுள்ள காற்றியக்கி மின் உற்பத்தி நிறுவனம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

(ஆ) அதற்கு மத்திய அரசு அளித்துள்ள மானியத் தொகை எவ்வளவு?